# கிருபையுள்ள வார்த்தை ®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

Vol - 19 | January ஜனவரி | 2019

ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-




## இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதனத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.

எரேமியா 33:6


கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE** ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| பரிபூரண சமாதானம் | 3 |
| தெபோராள் | 7 |
| தேவனுக்காக வாழ்வோம் | 8 |
| சிறுவர்பகுதி | 14 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

**ஞாயிறு**
**மதியம் 3:30 மணி**

செய்தியாளர்
போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

**ஞாயிறு காலை 6:45 மணி**

செய்தியாளர்
சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை
நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.






2018 ஆம் ஆண்டு இறுதி நன்றி செலுத்தும் மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கான ஸ்தோத்திர கூட்டத்தில் நமது ஆசிரியர் செய்தியளித்தபோது..


**கிருபையுள்ள வார்த்தை**

தேவனுடைய சமாதானத்தையும்
சத்தியத்தையும் வெளிப்படுத்தும் வார்த்தை

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




Send Postal Expenses only
and
receive
The Voice of Truth
International Vol. 98

# பரிபூரண சமாதானம்

P.C. பிலேமோன் ராஜா



அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இந்த புதிய ஆண்டின் முதல் மாதத்தில் நாம், எரேமியாவின் தீர்க்கத்தரிசன புத்தகம் 33ம் அதிகாரம் 6ம் வசனத்தை மையமாக கொண்டு தியானம் செய்து, புதிய தீர்மானங்களை எடுப்போம். எரே 33:6 "இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்."

## 1. குணமாகுங்கள்

சமாதானம் என்பது இன்றைய நாட்களில் மனிதனின் அத்திவாசிய தேவையாகிவிட்டது. ஏனெனில் பெரிய பணக்காரனாக இருந்தாலும் சரி, இல்லை அற்பமான ஏழையானாலும் சரி, எல்லாரும் ஏங்குவதும் தேடுவதும் நிம்மதி அதாவது சமாதானத்திற்காகதான். தேவனுடைய வார்த்தை, நமக்கு பரிபூரண சமாதானம் கிடைப்பதுப்பற்றி பேசுகிறது (எரே 33:6).



அந்த பரிபூரண சமாதானத்தை பெறவும், அதை அனுபவிக்கவும், நாம் ஒவ்வொருவரும் தேவனாலே குணமாக்கப்பட வேண்டும். தேவனாலே மாத்திரமே நம்மை, நம் ஆத்துமாவை அழிக்கும் பாவ நோயிலிருந்து குணமாக்க முடியும். எரேமியா 17:14 "கர்த்தாவே, என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்; என்னை இரட்சியும், அப்பொழுது இரட்சிக்கப்படுவேன்; தேவரீரே என் துதி." அதை நாம் அறிந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில் இஸ்ரவேலர் அதை அறியாததினால் வீணரானார்கள். ஓசியா 11:3 "நான் எப்பிராயீமைக் கைபிடித்து நடக்கப் பழகினேன். ஆனாலும் நான் தங்களைக் குணமாக்குகிறவனென்று அறியாற்போனார்கள்."

தேவன் தமது வார்த்தையினாலே நம்மை குணமாக்குகிறார். சங்கீதம் 107:20 "அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்." ஆகையால் ஆண்டவர் நம்மை குணமாக்க வேண்டுமென்றால், நாம் சிலவற்றை செய்ய வேண்டும்.

### அ] ஜெபியுங்கள்

ஆண்டவர் நம்மை சரீர மற்றும் ஆத்தும நோயிலிருந்து குணமாக்க, நாம் ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். சங் 6:2 "என்மேல் இரக்கமாயிரும் கர்த்தாவே, நான் பெலனற்றுப்போனேன்; என்னைக் குணமாக்கும் கர்த்தாவே, என் எலும்புகள் நடுங்குகிறது."

நம்மிடம் ஜெபிக்கிற பழக்கம் இருக்கிறது; ஆனால் கிரமமாக செய்கிறோமா என்பதை யோசித்துப் பாருங்கள். தானியேல், தாவீது, அப்போஸ்தலர்கள், இன்னும் பரிசுத்தவான்கள் அநேகர், ஜெபிக்கிறதற்கு என்று நேரம் ஒதுக்கி ஜெபித்தனர். நாம் எப்படி ஜெபிக்கிறோம்? ஜெப நேரம் என்று ஒன்று இருக்கிறதா? எவ்வளவு மணி நேரம் ஜெபிக்கிறோம்? ஒரு மணி நேரமாவது ஜெபிக்ககூடாதா என ஆண்டவர் சீடர்களிடம் கேட்டதை மறந்து விட்டோமா? (மத் 26). தினமும் காலண்டரில் உள்ள வசனத்தைப் படித்து, காலணி (செருப்பு, ஷூ அணிகிற நேரத்திற்குள் ஜெபிக்கிறவர்களாக நாம் இருப்பது, எவ்வளவு வேதனைக்குரியது என்று யோசித்துப் பாருங்கள். இந்த புதிய ஆண்டிலிருந்தாவது ஜெபிக்கிற பழக்கத்தை கிரமமாக செய்வோம்.

### ஆ] மனதை உடையுங்கள்

சங்கீதம் 147:3 "இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார்."

உடைந்த உள்ளங்களுக்கு உன்னதமான தேவன் மிகவும் அருகில் இருக்கிறார். நம் உள்ளம் பாவத்தாலோ, துன்பத்தினாலோ மற்றும் வியாதியினாலோ உடையும்போது, தேவன் நம் அருகில் தான் இருக்கிறார். ஆனால் நாம் அதை உணராமல், அவரை விட்டு பின்வாங்குறவர்களாக,

தூரம் செல்கிறவர்களாக இருக்கிறோம். நம்மில் அநேகருக்கு துன்பம் மற்றும் வியாதியில் மனது சீக்கிரமாக உடைந்துவிடுகிறது, ஆனால் பாவ நோய் தாக்குகையில் மனதை கடினப்படுத்துகிறோம். அவ்வாறு இல்லாத வண்ணம் பார்த்துக்கொள்ள கடினமாயிருப்போம். **எபிரேயர் 3:13** "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்."

### இ. மனந்திரும்புங்கள்

**எரேமியா 3:22** "சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்; உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன் என்றார். இதோ, உம்மிடத்தில் வருகிறோம்; நீரே எங்கள் தேவனாகிய கர்த்தர்"

செய்த பாவத்தை குறித்து மனம் உடைந்து வருந்துவதின் அடுத்த நிலை மனந்திரும்புதலாகும். அப்படி நாம் மனந்திரும்பும் போது தேவன் நம்மை குணமாக்குகிறவராயிருக்கிறார். தேவன் நமது சீர்கேடுகளை குணமாக்க ஆவலாக இருக்கிறார். நாம் நமது சீர்கோடுகளிலிருந்து துரிதமாக திருந்த வேண்டும். அப்பொழுது, மனந்திரும்பிய நினிவே மக்கள் பேரழிவிலிருந்து காக்கப்பட்டது போல நாமும் காக்கப்படுவோம், ஆகையால் இன்றே மனந்திரும்புவோம்!



**ஏசாயா 19:22** "கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார்; அடித்து குணமாக்குவார்; அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள்; அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார்."

### ஈ) சமாதானம் கூறுங்கள்

சமாதானத்தை சொல்லுகிறவர்களாக மற்றும் கொடுக்கிறவர்களாக இருப்போம். அப்பொழுது தேவன் நம்மை குணமாக்குவார். **ஏசாயா 57:18,19** "அவர்கள் வழிகளை நான் பார்த்து, அவர்களைக் குணமாக்குவேன்; அவர்களை நடத்தி, திரும்பவும் அவர்களுக்கும் அவர்களிலே துக்கப்படுகிறவர்களுக்கும் ஆறுதல் அளிப்பேன். தூரமாயிருக்கிறவர்களுக்கும் சமீபமாயிருக்கிறவர்களுக்கும் சமாதானம் என்று கூறும் உதடுகளின் பலனைச் சிருஷ்டிக்கிறேன், அவர்களைக் குணமாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."

தேவன் நம்மை குணமாக்குவது மேற்பூச்சாக இருக்காது **(எரே 6:14; 8:11).** மாறாக, அது அன்பினாலே செய்கின்ற ஒன்றாக இருக்கும். **ஓசியா 14:4** "நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களை விட்டு நீங்கிற்று." தேவன் நம்மை குணமாக்கும் போது நாம் முழுமையாக குணமாவோம். **சங்கீதம் 103:3-5** "அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி, நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது."

ஆகையால், தேவன் நம்மை குணமாக்கத்தக்கதாக நம் இருதயத்தை செம்மைபடுத்துவோம். **மத்தேயு 13:15** "இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே."

## உ. சத்தியத்திற்கு ஒப்புக்கொடுங்கள்

அடுத்ததாக, 'தேவனுடைய வார்த்தையே' நமக்கு சமாதானத்தை தருவதாக இருக்கிறது **(ரோமர் 15:4).** தேவனுடைய வார்த்தையே, 'சத்தியமாக' இருக்கிறது **(யோவான் 17:17).** தேவனுடைய வார்த்தையே 'விடுதலையும்' தருகிறது **(யோவான் 8:8).** ஆகையால் சமாதானத்தை பரிபூரணமாக பெற, சத்தியத்திற்கு நம்மை நாமே ஒப்புக்கொடுக்க வேண்டும். சத்தியத்திற்கு ஒப்புக்கொடுப்பது என்பது நான்கு நிலையாக உள்ளது.

### அ) சத்தியத்தினை கேளுங்கள்

**ஏசாயா 28:23** "செவிகொடுத்து என் சத்தத்தைக் கேளுங்கள்; நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்."

சத்தியத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க முதலாவது சத்தியத்தைக் கேட்க வேண்டும், தியானிக்க வேண்டும் மற்றும் ஆராய வேண்டும். **சங்கீதம் 1:2** "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய

வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்."

ஆகையால் சபையாக கூடி வேதத்தை படிக்க கிடைக்கிற தருணங்களை, இந்த ஆண்டிலே எந்த சூழ்நிலையிலும் தவறாவிடாதிருங்கள். வேதம் வாசிக்கின்ற போதும், அதனை தியானிக்கும் போதும் ஆண்டவர் நம்மிடம் பேசுகிறார். ஆண்டவர் புதிதாக யாருக்கும் ஒன்றும் வெளிப்படுத்தப் போவதில்லை; ஆவியானவரும் புதிதாக பேசப்போவதில்லை. அவர், இயேசு கிறிஸ்து சொன்னவைகளையே, அதாவது, புதிய ஏற்பாட்டில் உள்ளவைகளையே நமக்கு நினைவுப்படுத்துகிறவராயிருக்கிறார், மற்றும் போதிக்கிறவராயிருக்கிறார். யோவான் 16:13–14 "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்."

ஆகையால், யாராவது ஆவியானவர் சொன்னார் என்று புதிதாக ஒன்றை, அதாவது ஆண்டவர் இயேசு சொல்லாததை சொல்வார்களானால், அது அவர்களது கற்பனையேயன்றி, அது ஆண்டவர் அல்லது ஆவியானவருடைய வெளிப்பாடு அல்ல. ஏனெனில் தேவன் நமக்கு சொல்ல வேண்டிய அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் மூலம் சொல்லிவிட்டார் (எபி 1:1–2). ஆவியானவரும் அதை நமக்கு தீர்க்கத்தரிசிகளை வைத்து வேதாகமாக எழுதி கொடுத்திருக்கிறார் (2 தீமோ 3:16–17; 2பேதுரு 1:20–21). ஆகையால் வெளிப்படுத்தப்பட்டுள்ள சத்தியம் அனைத்தும் வேதாகமத்தில் உள்ளது; அதை இரவும் பகலும் வாசிப்போம் மற்றும் தியானிப்போம்.

### ஆ) சத்தியத்தினை விசுவாசியுங்கள்

1தெச 2:13 "ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது."

ஆண்டவர் இயேசு சொன்னதை அப்படியே விசுவாசிக்க வேண்டும். ஆண்டவர் சொன்ன வார்த்தையில் ஏதோ ஒன்றை சந்தேகப்படுவது என்பது முழு வேதாகமத்தையும் சந்தேகப்படுவதை போன்றதாகும். அது எந்தவகையிலும் நமக்கு பயன்தராது. எபி 4:2 "ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது போல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை."

இன்றைய நாட்களில் அநேகர் தேவனுடைய வார்த்தையை (சத்தியத்தை) தங்கள் இருதயத்திற்குள் செல்லவிடாமல், தங்கள் சுயத்தினாலே வழியை அடைத்து வைத்திருக்கின்றனர். நாம் அப்படி இராதபடி எச்சரிக்கையாக இருக்கக்கடவோம். யாக் 1:21 "ஆகையால் நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்."

### இ) சத்தியத்திற்கு கீழ்படியுங்கள்

யாக்கோபு 1:22 "அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்"

அடுத்ததாக, நாம் விசுவாசிக்கிற தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்திற்கு அப்படியே கீழ்படிகிறவர்களாக இருக்க வேண்டும். நம்மை சத்தியத்திற்கு கீழ்படியாமல் செய்கின்ற, மற்றும் தடுக்கின்ற எல்லாவற்றையும் தூக்கியெறிகிற துணிவு நமக்கு வேண்டும். கலா 5:7 "நீங்கள் நன்றாய் ஓடினீர்களே ; சத்தியத்திற்குக் கீழ்படியயாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்?"

சத்தியமாகிய தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிவதற்கு மாற்றாக, அல்லது பதிலாக, எதை ஒன்றையும் நாம் அவருக்கு கொடுக்க முடியாது (1சாமு. 15:22–23). தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாததினாலே இஸ்ரவேலர்கள் தண்டிக்கப்பட்டதை நினைவில்கொள்வோம். எபி 4:6,7

"ஆகையால், சிலர் அதில் பிரவேசிப்பது இன்னும் வரப்போகிற காரியமாயிருக்கிறபடியினாலும், சுவிசேஷத்தை முதலாவது கேட்டவர்கள் கீழ்ப்படியாமையினாலே அதில் பிரவேசியாமற் போனபடியினாலும், இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்..."

தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாத ஒவ்வொருவரும், நியாயத்தீர்ப்பிலே தேவனுடைய வார்த்தையினாலே தண்டிக்கப்படுவோம். (யோவான் 12:48). ஆகையால், "சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என சாமுவேல் கீழ்படிந்தது போல கீழ்படிவோம் (1சாமு. 3)

**ஐ) சத்தியத்தில் நிலைத்திருங்கள்**

**யோவான் 15:7** "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்."

அடுத்ததாக, கீழபடிந்த சத்தியமாகிய தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்க வேண்டும். அதாவது நமது கீழ்படிதலிலே நிலைநிற்க வேண்டும். ஒருமுறை கீழ்படிந்து மறுமுறை தவறுவதல்ல; மாறாக, ஒவ்வொருமுறையும் கீழ்படிய வேண்டும். **நீதிமொழி 4:4** "அவர் எனக்குப் போதித்துச் சொன்னது; உன் இருதயம் என் வார்த்தைகளைக் காத்துக்கொள்ளக்கடவது; என் கட்டளைகளைக் கைக்கொள், அப்பொழுது பிழைப்பாய்."

தேவனுடைய தாசனாகிய யோபு சொல்வதைப் போல நாமும் சொல்கிறவர்களாக ஒரு முன்மாதிரியான வாழ்வு வாழ்வோம். **யோபு 23: 11,12** "என் கால்கள் அவர் அடிகளைப் பற்றிப் பிடித்தது. அவருடைய நெறியைவிட்டு நான் சாயாமல் அதைக் கைக்கொண்டேன். அவர் உதடுகளின் கற்பனைகளை விட்டு நான் பின்வாங்குவதில்லை; அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன்."

பவுல் தீமோத்தேயுவிற்கு சொல்வதை நாம் நினைவில் கொள்வோம். நாமும் கற்று நிச்சயித்துக் கொண்ட சத்தியத்தில் நிலைத்திருப்போம். (2தீமோ 3:14).

**இறுதியாக,**

பிரியமானவர்களே! ஆண்டவர் இயேசு அவருடைய சமாதானத்தையே நமக்கு தந்திருக்கிறார் (யோவான் 14:27). அதை பரிபூரணமாக அனுபவிக்க, தேவன் நம்மை குணமாக்க, நம்மை நாமே தேவன் வெளிப்படுத்திய சத்தியத்திற்கு ஒப்புகொடுப்போம். இந்த புதிய ஆண்டு முழுவதும் கர்த்தர் உங்களுக்கு சமாதானம் தந்தருளுவராக. ஆமென்.

**– அன்புடன், ஆசிரியர்**


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431)*** ***Nambikai TV : Every Sunday 3.30 p.m.***

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 09844070763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# தெபோராள்


பேபி ராஜா



சத்தியத்தை நேசிக்கின்ற அருமையான சகோதரிகள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் என் புத்தாண்டு வாழ்த்துக்களை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த வருடம் முழுவதும் நம் அனைவருடனும் கூட இருந்த தேவன், இந்த ஆண்டும் நம்முடன் இருந்து நம்மை வழிநடத்த, நாம் அனைவரும் தேவ பிள்ளைகளாக இருக்க தேவனிடம் ஜெபிப்போம்.

நியாயதிபதிகள் இஸ்ரவேலரை நியாயம் விசாரித்த அந்நாட்களில், நியாயாதிபதி ஏகூத் மரணத்திற்கு பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ததினால், தேவன் அவர்களை கானானியரிடம் ஒப்புக்கொடுத்தார். கானானிய ராஜா யாபினின் சேனாதிபதியாக சிசெரா என்பவன் தொளாயிரம் இருப்பு இரதங்களை உடைய பலசாலியாக இருந்தான். அவன் இஸ்ரவேல் மக்களை மிகவும் துன்பப்படுத்தினான்.



அக்காலத்திலே இஸ்ரவேல் மக்களை லபிதோத்தின் மனைவியாகிய தெபோராள் என்னும் தீர்க்கத்தரிசி நியாயம் விசாரித்து வந்தாள். அவள் கர்த்தருடைய வார்த்தையின்படியே, பாராக்கை யுத்தம் செய்ய ஏவினாள். பாராக் தெபோராளை துணைக்கு அழைக்க அவளும் யுத்தத்திற்கு சென்றாள். கர்த்தர் அந்நாட்களில் மிகப்பெரிய இரட்சிப்பை இஸ்ரவேலருக்கு தந்தார்.

இவள் ஒரு எளிய குடும்பத்தில் தோன்றிய போதிலும் அவளுடைய நீதியும் ஏழைகளின் மேல் இருந்த இரக்கமும் இவளுக்கு இஸ்ரவேல் மக்களிடத்தில் தலைமை பதவியை கொண்டு வந்தது. எப்பொழுதுமே தேவன் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார் **(யாக் 4:10).** இது தெபோராளின் வாழ்விலும் தெளிவாக தெரிகிறது. ஏனெனில் மேன்மைக்கு முன்னானது தாழ்மை **(நீதி 15:33).**

தெபோராளைப் போன்ற விசுவாசமும் தைரியமும் நிறைந்தவர்களாய் நாம் எழும்ப வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஏனெனில் இந்த உலகத்தினை பாவத்தின் கவர்ச்சியினால் இழுத்து, அவர்கள் வாழ்வை மோசம் போக்குகின்ற பிசாசின் சூழ்ச்சியை முறியடிக்க, நாம் தேவனுடைய வார்த்தை என்னும் ஆவியின் பட்டயத்தை எடுத்து கொண்டு அவனை மேற்கொள்ள வேண்டும் **(எபே 6:12–18).**

ஒரு வெற்றிப்பாடலை தெபோராளும், பாராக்கும் பாடினார்கள். தெபோராள் தீர்க்கதரிசனம் மூலம் தன் ஜனங்களை இரட்சித்தாள். அதனால் இஸ்ரவேலுக்கு சமாதனம் உண்டாயிற்று. நாமும் விசுவாசமும் தைரியமுடையவர்களாய் இருக்கும் பட்சத்தில், கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் பெரிய காரியங்களை செய்வார். தெபோராள் மூலம் எப்படி இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வந்ததோ, இதைப்போல ஆண்டவருக்கு நம்மை அர்ப்பணிக்கும்போது, நாமும் நம் பிள்ளைகளையும், நம் குடும்பத்தினரையும், நம் அன்பிற்குரியவர்களையும் மற்றும் இந்த உலகத்தையும் கிறிஸ்துவின் வார்த்தையால் இரட்சிப்பிற்கு நேராக வழிநடத்தலாம். ஆகையால் தெபோராளைப்போல நாமும் செயல்பட இந்த ஆண்டிலே தீர்மானிப்போம் மற்றும் செயல்படுவோம்!



## சிறுவருக்கான கேள்விகள்

1. தானியேல் எப்பொழுதும் போல என்ன செய்தார்?
2. எஸ்றாவின் தீர்மானம் என்ன?
3. மோசே எதை தெரிந்துக்கொண்டார்?
4. பவுல், தேவனுக்காக என்ன செய்தார்?
5. இந்த புத்தாண்டிலே, நீங்கள் தேவனுக்காக என்ன செய்யப் போகீறீர்கள்?

# தேவனுக்காக வாழ்வோம்

அன்பான வாலிபர்களே! உங்கள் அனைவருக்கும் அன்புள்ள ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் புதிய ஆண்டின் வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறேன். உங்களுடைய ஆவிக்குரிய தீர்மானங்களில் வெற்றிபெற வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அவைகளுக்காக ஜெபிக்கிறேன்.

உலகையே ஆண்ட மாபெரும் பாபிலோனிய பேரரசின் சக்ரவர்த்தி நேபுகாத்நேச்சார், தூரா என்னும் சமவெளியில் 60 அடி முழு உயரமும், 6முழ அகலமும் கொண்ட ஒரு பொற்சிலையை நிறுவி, ஜனங்கள் அனைவரும் அதை வழிபட பணித்தான். மற்றும் அச்சிலையை வணங்காமல் அரச கட்டளையை மீறி நடக்கிறவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படும் என எச்சரித்தான்.

அதே பட்டணத்தில், தேவனுக்காக வாழ்ந்த பக்திமிகுந்த 3 வாலிபர்கள் நண்பர்களாக இருந்தனர். அவர்கள் பெயர் அனனியா (சாத்ராக்), மீசாவேல் (மேஷாக்), அசாரியா (ஆபேத்நேகோ). நாம் அனைவருமே நமக்காக வாழாமல் தேவனுக்காக வாழ கடமைபட்டுள்ளோம் **(ரோமர் 14:7–8)**. நம்மை படைத்த தேவனுக்காக வாழ்வதென்பது எளிதான ஒன்றல்ல அதே நேரத்தில் அது கடினமானதும் அல்ல. அந்த 3 வாலிபர்கள், தேவனைத்தவிர யாரையும் வணங்க மாட்டோம் என்று மறுத்து விட்டனர்.

அரசன் அவர்கள் 3 பேருக்கும் மறுவாய்ப்பளித்து, 'நீங்கள் சிலையை வணங்க வேண்டும்; இல்லையென்றால் எரிகிற அக்கினி சூளையிலே போடப்படுவீர்கள்' என்று எச்சரித்தான். அந்த 3 பேரும், 'நாங்கள் வணங்குகிற தேவன் எங்களை காப்பாற்ற வல்லவர்; அவர் காப்பாற்றாமல் விட்டுவிட்டாலும், நாங்கள் எரிந்து சாம்பலானாலும் பரவாயில்லை, ஆனால் எங்கள் தேவனைத் தவிர, எந்த சிலையையும் வழிபட மாட்டோம்' என்று தங்கள் தீர்மானத்திலே உறுதியாக இருந்தார்கள்.

அரச கட்டளையை மீறின அவர்களை, எரிகிற அக்கினி சூளையை இன்னும் 7 மடங்கு அதிகமாக்கி, அதில் அந்த 3 பேரையும் ராஜா போடுவித்தார். ஆனால் தேவன் அவர்களை அற்புதமாக காப்பாற்றினார். அன்பான வாலிப தம்பியே, தங்கையே இந்த மாதிரி ஒரு வைராக்கியமான, தீர்மானமுள்ள வாழ்க்கை நாம் வாழ வேண்டும் என தேவன் எதிர்பார்க்கின்றார்.

நாம் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ, வேலைக்கோ பிற உலக காரியங்களுக்கோ குறித்த நேரத்தில் செல்கிறோம், மற்றும் செய்கிறோம். ஆனால் தேவ காரியங்களை எப்படி செய்கிறோம்? தேவனுடைய காரியங்களைக் குறித்து நம் மனோநிலை எப்படி இருக்கிறது? தேவனுக்காக வாழும் வாழ்வை நாம் என்னவாக பார்க்கிறோம்? என்ன நடந்தாலும் தொழுகைக்கும், வேத ஆராய்ச்சிக்கும் செல்வதும், வேதம் வாசிக்கிறதும், ஜெபிக்கிறதும், சுவிசேஷம் சொல்வதும் மற்றும் சபைக்கடுத்த காரியங்களில் ஈடுபடுவதும் போன்றவை தான் தேவனுக்காக வாழ்வதாகும். இவற்றை தவறாமல் செய்ய முடியும் என்று தீர்மானித்து புதிய ஆண்டிற்குள் செல்வோம்.

அன்பானவர்களே! கழிந்த வருடம் சென்றதாக இருக்கட்டும். இந்த புத்தாண்டிலே நாம் தேவனுக்காக வாழ புதிய தீர்மானங்களை எடுப்போம். தேவனுடைய காரியங்களுக்கு முதலிடம் கொடுப்போம். நம்முடைய தீர்மானங்களில் நிலைத்திருப்போம். தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக!

– அண்ணன்,

**ஜோசப் பிரதீப்**

### சிறுவர் பகுதி புதில் எழுதியவர்கள்

1. K. பிளஸ்ஸி தேவகிருபை – மதுரை
2. A. கார்பஸ் பிலோமோன் – ஒத்தக்கடை
3. K. கெட்ஸி நேசகுமாரி – மதுரை
4. A. ஹானா ஜோதிராணி – ஒத்தக்கடை
5. K. பெட்டி பேபிராணி – மதுரை
6. A. கெனித்சாம் – மதுரை
7. M. ராஜா – கரூர்
8. M. ஜோனத்தான் – கரூர்

### நவம்பர் மாத புதில் எழுதியவர்கள்

1. A. ரோஸ்மேரி – சென்னை
2. T. லீனா வர்க்கீஸ் – கோவை

# தொடர் 28 எபேசியர் : கிறிஸ்துவும் அவரது சபையும்

### தலைப்பு

பவுலினால் எழுதப்பட்ட இந்தக் கடிதம், வசனம் 1ல் குறிப்பிடப்பட்டவர்களைக் கொண்டு பெயரிடப்பட்டுள்ளது. ''எபேசுவில் இருக்கிற பரிசுத்தவான்கள், ''எபேசுவில்'' என்ற சொற்றொடரானது சில பழைய கையெழுத்துப் பிரதிகளில் காணப்படாதபடியால், இது எபேசு தொடங்கி சபைகளின் மத்தியில் சுற்றுக்கு விடப்படுதல் என்ற நோக்கங்கொண்ட ஒரு பொதுவான கடிதமாக இருந்திருக்கலாம். பவுல் எபேசு நகரத்தில் பல ஆண்டுகள் ஊழியத்தில் செலவிட்டிருந்த போதிலும், இந்த நிருபத்தில் தனிநபர்களுக்குரிய வாழ்த்துதல் எதுவும் காணப்படுவதில்லை என்ற உண்மையானது மேற்கூறப்பட்ட கோட்பாட்டிற்கு ஆதரவளிக்கிறது.

### பின்னணி

எபேசியருக்கு எழுதிய நிருபம், " சிறை நிருபங்கள் " என்று அழைக்கப்படும் நான்கு நிருபங்களில் முதலாவதாக உள்ளது. இந்த நான்கு நிருபங்களுமே பவுலின் கட்டுக்கள் பற்றி குறிப்பிடுகின்றன. (3:1 : பிலிப்பியர் 17, 13, 14: கொலோசெயர் 4:3, 18: பிலேமோன் 9, 13ஐக் காணவும்). இந்த நிருபங்களுக்கு இடையில் பல தொடர்புகள் உள்ளன. இவற்றில் இரு நிருபங்கள் தீகிக்குவினால் எடுத்துச்சென்று தரப்பட்டன. (6:21 : கொலேசெயர் 4:7). இவற்றில் மூன்று நிருபங்கள் தீமோத்தேயுவைக் குறிப்பிடுகின்றன. (பிலிப்பியர் 1:1 : கொலேசெயர் 1:1:பிலேமோன்1). இவற்றில் இரு நிருபங்கள் ஒநேசிமுவைக் குறிப்பிடுகின்றன. (கொலேசெயர் 4:7 : பிலேமோன்10). இரு நிருபங்களில், ஒரே பட்டணத்தில் வாழ்ந்த கிறிஸ்துவர்கள் வாழ்த்துக்களை அனுப்புகின்றனர். (கொலேசெயர்4:10-14 : பிலேமோன் 23, 24). அனேகமாக இந்த நான்கு நிருபங்களுமே ஒரே காலகட்டத்தில் ஒரே இடத்தில் இருந்து எழுதப்பட்டிருந்தன எனலாம். பவுலின் முதல் சிறையிருப்பின்போது ரோமாபுரி என்பது இதற்கு சாத்தியமான இடமாக உள்ளது. அங்கிருந்து கி.பி. 60-62ல் இவை எழுதப்பட்டிருக்கலாம்.

பவுல் நீண்ட காலமாக எபேசு நகரத்தின்மீது ஆர்வம் கொண்டிருந்தார். அவர் தமது இரண்டாம் சுவிசேஷப்பயணத்தின் தொடக்கத்தில், அந்த திசையின் அருகில் செல்ல விரும்பியிருந்தார். ஆனால் அவருக்குத் தேவன் வேறு திட்டங்களைக் கொண்டிருந்தார். பவுல் அந்தப் பயணத்தில் இருந்து இல்லம் திரும்பிய வேளையில் ஏசுவில் சற்றுக்காலம் தங்கியிறுந்தார்(அந்த வேளையில் அங்கு சபை நிலை நாட்டப்பட்டிருக்கலாம்). பவுல் தமது மூன்றாம் சுவிசேஷப் பயணத்தின் போது அங்கு இரண்டு ஆல்லது மூன்று ஆண்டுகள் ஊழியம் செய்தார் (நடபடிகள் 19). அவர் அங்கிருக்கையில், சுவிசேஷமானது அந்தப்பகுதி முழுவதிலும் பரவிற்று (நடபடிகள் 19:10: வெளிப்படுத்தின விசேஷம் 2:11). பவுல் எபேசுவில் இருந்து மக்கெதோனியாவுக்கும் அகாயாவுக்கும் சென்றார். (1 மற்றும் 2 கொரிந்தியர் நிருபங்களில் பின்னணிக்குறிப்புகளைக் காணவும்). பின்பு அவர் எருசலேமுக்குத் திரும்பிச் சென்றார். திரும்பிச்செல்லும் வழியில் அவர் எபேசுவில் இருந்த சபையின் மூப்பர்களுக்கு மாபெரும் பிரசங்கம் ஒன்றைப் பிரசங்கித்தார். (நடபடிகள் 20: 17-38). பவுல் எருசலேம் சென்று சேர்ந்தபோது, அவர் கைது செய்யப்பட்டார். அவர் இரண்டு ஆண்டுகள் செசரியா நகரில் சிறை வைக்கப்பட்டிருந்தார். பவுல் இக்கடிதத்தை ரோமாபுரியிலிருந்து எழுதியிருப்பார் என்றால், இக்கடிதமானது அவர் எபேசுவுக்குச் சென்று வந்து நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் காலத்திற்குப் பின்பு எழுதப்பட்டிருக்கும் என்றாகிறது.

எபேசியருக்கு எழுதிய நிருபம் ஓரளவுக்குச் சிறியதாக இருந்தாலும், இது பவுலின் மிகநேர்த்தியான முயற்சிகளில் ஒன்றாக உள்ளது. ஒரு சில அதிகாரங்களில் அவர் மனிதனுடைய மீட்பிற்குக் கிறிஸ்துவின் மூலமாகத் தேவன் கொண்டிருந்த மாபெரும் திட்டத்தை முன்வைக்கின்றார் - மற்றும் "கிறிஸ்துவுக்குள்" இருக்கும் ஒவ்வொருவரும் இதன் செயல்விளைவைக் கொண்டிருக்க வேண்டும்.

பிந்திய ஆண்டுகளில், எபேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு ஒரு திறவுகோல் நகரமாக நிலைத்து இருந்தது. பவுல் சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டபோது, அவர் எபேசுவுக்கு வந்து, பின்பு

அங்கே தீமோத்தேயுவை விட்டுச் சென்றார் என்பது உறுதி (1 தீமோத்தேயு நிருபத்திற்கான குறிப்புகளைக் காணவும்). மேலும், அப்போஸ்தலரான யோவான் தமது வாழ்நாளின் கடைசிப்பகுதியில் எபேசு நகரத்தில் இருந்தார் என்று ஒரு பலத்த பாரம்பரியம் கூறுகிறது (யோவான் சுவிசேஷத்திற்கான குறிப்புகளைக் காணவும்). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கு எழுதப்பட்டது, இது எபேசு நகரத்தில் இருந்த சபையைக் குறிப்பிடுதலைக் கொண்டு தொடங்குகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 2:1).

## வரைகுறிப்பு

I. உபதேசரீதியான விஷயங்கள் : தேவன் நமக்கு என்ன செய்திருக்கின்றார் (1–3).

அ. பவுலின் வாழ்த்து (1:1, 2).

ஆ. தேவன் நம்மைக் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித்து இருக்கின்றார் (1:3–14).

இ. பவுலின் முதல் ஜெபம் (1:15–23).

ஈ. தேவன் தமது கிருபையினால் நம்மை இரட்சித்து இருக்கின்றார் (2:1–10).

உ. தேவன் நமக்கு – தம்மோடும் நமது சகமனிதர்களோடும் – சமாதானத்தைக் கொடுத்து இருக்கின்றார் (2:11–22).

ஊ. தேவன் தமது நித்தியமான நோக்கங்களை வெளிப்படுத்தினார் (3:1–13).

எ. பவுலின் இரண்டாவது ஜெபம் (3:14–21).

II. நடைமுறை : ஆகையால் நாம் என்ன செய்ய வேண்டும் (4–6).

அ. ஒருமைப்பாட்டிற்காகப் பாடுபடுதல் (4:1–6).

ஆ. தேவன் நமக்குக் கொடுத்துள்ள வரங்களை அவரது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்துதல் (4:7–16).

இ. "பழைய மனுஷனை" களைந்து போடுதல்; "புதிய மனுஷனை" தரித்துக் கொள்ளுதல் (4:17–5:20).

ஈ பிறருடன் எவ்வாறு உறவுபடுவது என்பதைக் கற்றுக்கொள்ளுதல் (5:21–6:9).

1. கணவர்களும் மனைவியர்களும் (5:22–33).

2. பெற்றோர்களும் பிள்ளைகளும் (6:1–4).

3. எஜமானர்களும் வேலைக்காரர்களும் (அடிமைகளும்) (6:5–9).

உ. கிறிஸ்தவ சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுதல் மற்றும் ஜெபித்தல் (6:10–20).

ஊ. முடித்தல் (6:21–24).

## எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள்

எபேசியருக்கு எழுதிய நிருபம் "சபை நிருபம்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இது சபையின் விஷயங்களைப் பற்றிய ஒரு சிறு பாடத்திட்டமாக உள்ளது; கிறிஸ்து, சபையில் எல்லாவற்றிற்கும் / எல்லாருக்கும் தலையாக இருக்கின்றார் (1:22; 5:28 ஐக் காணவும்); சபை கிறிஸ்துவின் சரீரமாக இருக்கின்றது (1:22, 23); நாம் சபையாகிய இந்த சரீரத்தில் தேவனுடன் ஒப்புவராக்கப்படுகின்றோம் (2:16); தேவனுடைய மகிமையும் ஞானமும் சபையின் மூலம் அறியப்படுகின்றன (3:10, 21); சபையானது தேவனுடைய நித்திய திட்டத்தின் அங்கமாயிருந்தது (3:10, 11); சபை என்ற ஒரே சரீரம் மாத்திரம் உள்ளது (4:4; 2–16ஐக் காணவும்); சபை வளரவேண்டும் என்று தேவன் நோக்கங்கொண்டுள்ளார் (4:16); கிறிஸ்துவே சரீரமாகிய சபையின் இரட்சகராய் இருக்கின்றனர் (5:23); சபை கிறிஸ்துவுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது (5:24); கிறிஸ்து, சபையில் அன்புகூர்ந்து தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் (5:25, 29); சபை பரிசுத்தமானதாக இருக்க வேண்டும் என்று கிறிஸ்து விரும்புகின்றார் (5:25–27); கிறிஸ்துவும் சபையும் ஒன்றாயிருக்கின்றனர் (5:31, 32); கர்த்தருடைய சபையானது சிறிதளவே முக்கியத்துவம் வாய்ந்தது என்று யாரேனும் கூறு முடியுமா?

பவுலினால் பயன்படுத்தப்பட்ட "ரகசியம்" என்ற வார்த்தை (1:9; 3:3, 4,9; 5:32; 6:19) "தூண்டுதல் செய்பவர்களுக்கு மாத்திரம் கிடைக்கப்பெறும் ரகசியமான விஷயங்கள்'' என்பதைக் குறிப்பிடுவதில்லை. மாறாக, அது கடந்தகாலத்தில்

ரகசியமாய் இருந்து. ஆனால் இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ள விஷயங்களைக் குறிக்கிறது (3:3-5). பவுல் தமது வாசகர்கள் (மற்றும் நாம்) "இந்த ரகசியத்தை'' அறிய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர் (3:4).

"கிறிஸ்துவுக்குள்" என்பது பவுலுக்கு விருப்பமான சொற்றொடர்களில் ஒன்றாக உள்ளது. அவர் இப்படிப்பட்ட சொற்றொடர்களைத் தமது கடிதங்களில் நூற்றுக்கும் அதிகமான முறைகள் பயன்படுத்தியிருக்கின்றார்; இந்தக்குறிப்புகளில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் உள்ளது. இந்தச் சொற்றொடரைக் கவனியுங்கள்; இதை அடையாளமிட்டுக் கொள்ளுங்கள் ; இதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்க முடியும் என்பது என்ன ஒரு அற்புதமான சிந்தனையாக உள்ளது (பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில் இருந்து பாடங்கள் என்ற பகுதியைக் காணவும்)!

## பொதுவான செய்திகள் — நெகிழியின் தீமைகள்

* நெகிழி அல்லது பிளாஸ்டிக் (Plastic) என்பது, ஒரு பொருள் ஏதாவது ஒரு நிலையில் இளகிய நிலையில் இருந்து பின்னர் இறுகி திட நிலையை அடைவதைக் குறிக்கும் சொல் ஆகும்.
* " வார்க்கத் தக்க ஒரு பொருள் " என்னும் பொருள் " பிளாஸ்டிக் கோஸ் " என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து பிளாஸ்டிக் என்ற சொல் உருவானது . நெகிழி என்னும் பொருளானது பிசைவு கொள்ளும் பொருள் ஆகும்.




* நெகிழி முதன் முதலில் 1862-ல் லண்டனைச் சேர்ந்த அலெக்சாண்டர் பார்க்ஸ் என்பவரால் செல்லுலோஸ் என்ற பொருளில் இருந்து தயாரிக்கப்பட்டு லண்டன் கண்காட்சியில் காட்சிக்கு வைக்கப்பட்டது. இதற்கு அவர் " பார்க்ஸ்டைன் " என்று பெயரிட்டார்.
* இயற்கை வளங்களைக் கொண்டு உருவாகும் நெகிழிப் பொருள்கள், அதிகம் தீங்கு தரும் வேதிப்பொருள்கள் அதனுடன் சேர்க்கப்படுவதால் பல்வேறு தீமைகளுக்குக் காரணமாகின்றன.
* நெகிழிப்பொருட்கள் செய்யும் தொழிற்சாலைகளில் மறுசுழற்சி செய்யும் போதும், உருகும்போதும் வெளியேறும் வாயுக்கள் நச்சுத்தன்மை உடையதால், ஊழியர்கள், மற்றும் அருகில் வசிக்கும் மக்கள் ஆகியோர் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.
* குறிப்பாக நெகிழிப் (பாலித்தீன்) பைகளால் சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகம் ஏற்படுகிறது.

கால்வாய்களிலும் அடைத்துக் கொள்வதால் நீர் வழிகள் அடைபட்டு மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கு போன்ற அபாயங்கள் ஏற்படுகின்றன. மனிதர் உண்டுவிட்டு கீழே போடும் நெகிழிப் பொட்டலங்களைத் தின்னும் விலங்குகளின் உணவுக் குழாய்கள் பாதிக்கப்பட்டு அவைகள் இறக்க நேரிடுகின்றன.

* தோல்நோய் முதல் புற்றுநோய் வரை பல நோய்களுக்கு காரணமாகின்றது. சிலருக்கு, தொட்டால்கூட ஒவ்வாமை என்ற நோய் ஏற்படுகிறது.
* மூச்சுக்குழாய் பாதிப்பு, குடல்புண், செரிமானமின்மை, நரம்புத்தளர்ச்சி, ரத்த மற்றும் சிறுநீரகச் செயல் குறைபாடு, நோய் எதிர்ப்பு ஆற்றல் குறைவு போன்றவை ஏற்படக்கூடும் என ஆய்வுகள் கூறுகின்றன.
* நெகிழி உறைகள் சுற்றப்பட்டு வரும் உணவுப்பொருட்களான சாக்லேட்டு, பால்கோவா போன்றவற்றில் நெகிழி வேதிப்பொருளான பென்சீன் வினைல் குளோரைடு கலந்து விடுகிறது. இதனால் புற்றுநோய் ஏற்படக் காரணமாகிறது. குட்லைப் இதழ், சிங்கப்பூர் வெளியிட்ட ஆய்வு முடிவுகள், "எளிதில் மட்காத, சிதையாத நெகிழிப்பொருட்களால் கழிவுக்குழாய்கள், சாக்கடைகள் ஆகியவைகளில் அடைப்பு ஏற்பட்டு, தேங்கி துர்நாற்றம், கொசு உற்பத்தி, நோய்கள் ஆகியவை ஏற்படக் காரணமாகின்றன.
* மட்காத நெகிழிப் பொருள்கள் வேளாண் நிலங்களில் தங்கி அதன் வளத்தைக் குறைத்து நஞ்சாக்குகிறது. பயிர் வளர்ச்சியையும் பாதிக்கிறது.
* கடற்கரை ஓரம், கடலில் எரியும் நெகிழிப் பொருள்கள் கடல்வாழ் உயிரினங்களுக்கும், வனப்பகுதியில் எறியப்படுபவை வனவாழ் உயிரினங்களுக்கும் தீங்கு விளைவித்து அழித்துவிடக் கூடியவை.

# பாடம் : 5 – கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பட்டிற்கு கீழ்பட்டவர்களல்ல

**ஊ. அந்த அதிகமான நம்பிக்கையின்படி தேவனிடத்தில் நெருங்கிச் சேருகிறோம்; நியாயப்பிரமாணத்தினால் அல்ல. (எபி. 7:19).**

**குறிப்பு :** இப்போது நாம் "நன்மையான" என்ற அந்த ஒரே வார்த்தையில் கவனம் செலுத்துவோம். தேவன் மோசே மூலமாய் அருளிச்செய்த நியாயப்பிரமாணம் நல்லதல்ல என்று நாம் தர்க்கிக்கவில்லை. ஆனால் தேவன் இயேசு கிறிஸ்து மூலமாய் நமக்கு அருளியிருப்பது முன் சொன்னதைக் காட்டிலும் மிகவும் விசேஷித்தது.

ஆதலால் நாம் இங்கு விசேஷித்தது என்னப்பட்ட ஒன்று இருக்கும்போது சாதாரணமான ஒன்றை நாம் பிடித்துக்கொள்ள வேண்டுமா ? ஆதலால் நாம் பற்றிப்பிடிக்க வேண்டியது மேலானதொன்றையே. மட்டமானது ஒன்றைக் கொடுத்து பதிலுக்கு மேலானதைப் பெற்றுக்கொள்வதில் என்ன கஷ்டம் உள்ளது ? உண்மை இப்படி இருக்க அநேகர் தங்களை பழைய ஏற்பாட்டின் துணைகளாகிய கற்பனைகளால் ஆளப்படுவதாக பிரயசைப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். முன்கூறப்பட்ட விளக்கங்களால் தெளிவுபடும் காரியம் என்னவெனில் கிறிஸ்தவன் பெற்றுள்ள மேலான நம்பிக்கையின்படி கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் நெருங்கிச் சேருவதேயன்றி பழைய ஏற்பாட்டின் பத்து கற்பனைகளிலான நியாயப்பிரமாணத்தினால் அல்ல.

**எ. ஆதலால் இயேசுவானவர் ஆணையின்படியே ஆசாரியராக்கப்பட்டு ஒரு விசேஷித்த உடன்படிக்கைக்கு பிணையாளியானார். (எபிரேயர் 7:22)**

1. அன்றியும் லேவியின் ஆசாரியத்துவமோ மரணத்தினிமித்தம் நிலைத்திருக்கக் கூடாதாயிற்று. (வ. 23)

2. இயேசுவோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியால் மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராய் இருக்கிறார். (வசனம் 24)

3. ஆணையோடே விளங்கிய வசனமோ இயேசுவை பிரதான ஆசாரியத்துவத்திற்கு ஏற்றவராக்கியது. (வசனம் 28–டன் 21–ஐ சீர் தூக்கிப் பார்க்கவும்).

ஆணையோடே விளங்கிய வசனமோ பின்பு பிரமாணமாக்கப்பட்டது. (வசனம் 28)

**குறிப்பு :** பின்பு என்ற பதத்தை நோக்குமிடத்து நியாயப்பிரமாணத்திற்குப் பின்பு என்ற அர்த்தத்துடன் சொல்லப்படுகிறது. ஆணையுடன் கூடிய உடன்படிக்கை வாக்குத்தத்தம் அருளப்பட்ட அப்போதிலிருந்தே பத்து கற்பனைகளுடைன் வெளியான நியாயப்பிரமாணம் முற்றுப்பெறுகிறது.

**ஏ. இயேசு கிறிஸ்து பிரதான ஆசாரியராய் நம் நிமித்தம் பதவி வகிக்கிறார். (எபிரேயர் 8:1)**

1. மெய்யான கூடாரத்தின் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவர் இயேசுவே.

2. கர்த்தரே (மனிதனல்ல) இந்த மெய்யான கூடாரத்தின் ஸ்தாபகர்.

3. பரலோகத்தில் உள்ளவைகளின் நிழலுக்கும் சாயலுக்கும் ஒப்பாகவே லேவியின் ஆசாரியத்துவம் விளங்கிற்று. (வசனம் 5)

4. கிறிஸ்துவின் ஊழியமே அதைக்காட்டிலும் மேலான சிலாக்கியமுள்ளது. (வசனம் 6)

5. இரண்டு காரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

a. அவர் விசேஷித்த உடன்படிக்கைக்கு மத்தியஸ்தர்

b. இந்த உடன்படிக்கையோ விசேஷித்த வாக்குத்தத்தங்களால் ஸ்தாபிக்கப்பட்டது. (வசனம் 6)

**ஐ. அந்த முதலாம் உடன்படிக்கை [பத்து கற்பனைகளாகிய நியாயப்பிரமாணம்] பிழை இல்லாதிருந்ததினால் இரண்டாம் உடன்படிக்கை ஏற்படுத்த தேவையில்லை.**

1. தேவன் முதலாம் உடன்படிக்கையைப் பெற்றவர்களிடம் குற்றத்தைக் கண்டார்.

2. புதிய உடன்படிக்கையை தேவன் வாக்குத்தத்தம் செய்தார். (வசனம் 8)

3. புதிய உடன்படிக்கையைப் போன்றதல்ல. (வசனம் 9)

4. புதிய உடன்படிக்கை என்று சொன்னதினாலேயே முந்தினதை பழமையாக்கினார்.

**குறிப்பு :** எபிரேயருக்கு எழுதிய நிருபத்தில் பவுல் அப்போஸ்தலன் இதுவரையில் அவர்களுடைய மனதை, ஜாக்கிரதையுடனும் பொறுமையுடனும், பிரயாசையுடனும் நடத்தி வந்து முந்தினது பழமையாயிற்றென்றும் நாளாந்திரத்தில் உருவழிந்து போகக்கூடியது என்றும் விளம்பரப்படுத்துகிறான். (வசனம் 13)

பிறகு முந்திய அல்லது பழைய உடன்படிக்கையைப் பற்றி பல விளக்கங்களைத் தருகிறான். அது மறைந்து போயிற்று என அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென அவாவுகிறான்.

**ஓ. முதலாம் உடன்படிக்கை பெற்றிருந்தவையாவன. (எபிரேயர் 9:1-5)**

1. ஆராதனைக்கேற்ற முறைமைகள்.
2. பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலம்
3. கூடாரம்
4. குத்து விளக்கு
5. தேவசமூக அப்பம்
6. இரண்டாம் திரை
7. பொன்னாலான தூபகலசம்
8. பொன் தகடு பதிக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டி
9. பொன் பாத்திரம்
10. மன்னா
11. ஆரோனுடைய தளிர்ந்த கோல்
12. உடன்படிக்கையின் கற்பலகைகள்
13. கேரூபீன்கள்
14. கிருபாசனம்
15. இரத்தம்

**ஓ. குறிப்பு : விசேஷித்தவைகள் பத்து கற்பனைகளே இந்த உடன்படிக்கையின் கற்பலகையின் மேல் எழுதப்பட்டிருந்தது. பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லும் மார்க்கம், முதலாம் உடன்படிக்கை இருந்தவரை வெளிப்படாமல் இருந்தது. (வசனம் 8)**

1. கூடாரம் என்பது இக்காலத்துக்கு உதவுகிற ஒப்பனையாய் இருந்தது. (வசனம் 9)

2. காணிக்கைகளும் பலிகளும் இந்தக் கூடாரத்தில் தான் செலுத்தப்பட்டன.

3. இவைகள் மனசாட்சியை பூரணப்படுத்தக்கூடிய வலிமையற்றதாய் இருந்தது. (வசனம் 9)

4. அவைகள்,

a. போஜனம்

b. பானம்

c. பலவித ஸ்நானம்

d. சரீரத்திற்கேற்ற சடங்கு ஆகியவைகளாயிருந்தன.

5. இவைகள் சீர்திருத்தம் உண்டாகும் காலம்வரை அமுலில் இருந்து வந்தன.

**ஔ. பெரிதும் உத்தமமான கூடாரத்தின் வழியாக கிறிஸ்துவானவர் பிரதான ஆசாரியராக வெளிப்பட்டார். (வசனம் 11)**

1. தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்தார். (வசனம் 12)

2. இயேசு கிறிஸ்துவின் இரத்தமோ முதலாம் உடன்படிக்கையிலுள்ள வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாய் இருக்கிறது. (வசனம் 13-14)

**ஃ. கிறிஸ்துவே புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். (வசனம் 15)**

1. முதலாம்உடன்படிக்கையின் காலத்தில் நடந்த அக்கிரமங்களை தன் மரணத்தின் மூலமாய் நிவர்த்தி செய்தார். (வசனம் 15)

2. இந்த உடன்படிக்கை கிறிஸ்து மரிக்கும் வரை அமுலுக்கு வரவில்லை. (வசனம் 16-17)

**N. மோசேயினால் உண்டாக்கப்பட்ட முதலாம் உடன்படிக்கை இரத்தத்தினாலேயே பிரதிஸ்டை பண்ணப்பட்டது. (வசனம் 18-22)**

1. ஒவ்வொரு கட்டளையும் முதலாவதாக பேசப்பட்டது.

2. பிறகு இக்கட்டளைகள் இரத்தத்தினால் பிரதிஷ்டிக்கப்பட்டன.

3. சிலர் தர்க்கிக்கிற பிரகாரமாய் இல்லாமல் மோசே மட்டும் அல்லாமல் தேவனும் கூட, இந்த உடன்படிக்கையின் ஒவ்வொரு அம்சங்களையும், ஒழுக்கம், நேர்மை, சமயாச்சாரம், சடங்காச்சாரம் இகைளின்படியெல்லாம் கொடுத்து அவைகளைப் பின்பற்ற வலியுறுத்தி தந்திருக்கிறார்.

4. பரலோகத்திற்குரிய காரியங்களை நியாயப்பிரமாணம் அடையாளங்களாகவே ரூபகரப்படுத்துகிறது.

a. இந்த அடையாளச் சின்னங்கள் மிருகங்களின் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்பட்டன.

b. மேலும் பரலோகத்திற்குரிய சாயலானவைகள் கூட சிறப்பான பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிற்று. (வசனம் 23)

5. கைகளினால் உண்டாக்கப்பட்ட பரிசுத்த ஸ்தலங்கள், அடையாளமாகவே இருந்தது. (வசனம் 23)

# மோசே

அன்பு செல்ல குழந்தைகளுக்கு, ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், அக்காவின் அன்பின் புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த மாதம் நாம் மோசே என்பவர் எடுத்த சிறந்த தீர்மானத்தைப் பற்றி படிப்போம்.

இஸ்ரவேல் ஜனங்கள் யாக்கோபின் நாட்களில் பஞ்சம் பிழைப்பதற்காக எகிப்து நாட்டிற்கு சென்றனர். நாளடைவில் அங்கே அவர்கள் அடிமைகளாக்கப்பட்டு, மிகவும் துன்புறுத்தப்பட்டனர். அப்பொழுது அவர்கள் மிகவும் அழுது தேவனிடம் விண்ணப்பம் செய்தார்கள். அந்த ஜனங்களை மீட்க தேவன் மோசே என்ற தன்னுடைய வேலைக்காரனை அனுப்பினார்.

யார் இந்த மோசே? பிறப்பால் இஸ்ரவேலனாக இருந்தாலும், இவன் எகிப்தின் இளவரசியால் அவளது மகனாக, எகிப்தின் இளவரசனாக வளர்க்கப்பட்டான். தேவன் தன்னுடைய வேலையை செய்ய அழைத்த போது, மோசே எகிப்திலே இளவரசனாக சொகுசு வாழ்க்கை வாழ்வதை விட, தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலருடன் கஷ்டப்படுவதையே தீர்மானமாக தெரிந்துக்கொண்டு, சுமார் 40 வருடங்கள் அவர்களை எகிப்திலிருந்து சீனாய் மலை வரைக்கும் வழிநடத்தி வந்தார்.

இஸ்ரவேலர்கள் மோசேக்கு விரோதமாக பேசி அவனை துன்பப்படுத்தினார்கள். தேவனுக்கு கோபம் வந்து அவர்கள் எல்லாரையும் அழிக்க விரும்பினார். ஆனால் மோசே என்னை அழித்துப்போடும், அவர்களை மன்னித்து காப்பாற்றும் என வேண்டினார்.

இந்த 40 ஆண்டுகள் மோசே, தன் உடன் பிறந்தவர்களாலும், தன் குடும்பத்தாராலும், தனது லேவி கோத்திரத்தாலும், தன் இஸ்ரவேல் ஜனங்களாலும் மிகவும் தரக்குறைவாக பேசப்பட்டு, துன்புறுத்தப்பட்ட போதும் தேவனுடைய பிள்ளைகளாகிய இஸ்ரவேல் ஜனங்களுடனே இருப்பதையே விரும்பினார். ஏன் தெரியுமா குட்டீஸ்? உலகத்தில் இருக்கும் பாவ சந்தோஷங்களைவிட, மோசே, தேவபிள்ளைகளோடே இருக்கும் வாழ்வே மேலானது என எண்ணினார். அது உண்மைதான். குட்டீஸ், நீங்களும் உலகத்தில் இருக்கிறவர்களுடன் இருப்பதை விட, தேவனுடைய பிள்ளைகளோடு இருந்து, தேவனை துதிப்பதை, ஆராதிப்பதை தெரிந்துகொள்வீர்களா? அப்படி செய்தால், நிச்சயம் உங்களுக்கு தேவ ஆசீர்வாதம் தான்.




**மனனவசனம் :** ரோமர் 12:10 "சகோதர சிநேகத்தில் ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்."

— பிரியா ஆன்டனி

# எஸ்றா

ஹாய்! செல்லக்குட்டிஸ். உங்கள் எல்லாருக்கும் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினாலே அக்காவின் புத்தாண்டு வாழ்த்துக்கள் மற்றும் ஸ்தோத்திரங்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த புத்தாண்டில் ஒவ்வொருவரும் ஒரு புதிய தீர்மானத்தை நிச்சயம் எடுத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அது நல்லது தான். சரி செல்லங்களா! எப்படிப்பட்ட தீர்மானம் நமக்கு இருக்க வேணடுமென்று வேதத்திலிருந்து பார்க்கலாமா?



பாபிலோன் என்னும் தேசத்தில் அர்தசஷ்டா என்னும் ராஜா அரசாண்டு வந்தார். இவருடைய அரண்மனையில் திறமைவாய்ந்த வேதபாரகராக இருந்தவர் தான் எஸ்றா. இந்த எஸ்றா எருசலேமிலிருந்து அடிமையாக பாபிலோனுக்கு கொண்டுபோகப்பட்டார். தேவனுடைய நியாயப்பிரமாணங்களையும், கட்டளைகளையும் நன்கு கற்றுத் தேறினவனாக இருந்தார். "வேதத்தை வாசிப்பதிலும், தியானிப்பதிலும் மற்றும் பிறருக்கு உபதேசம் செய்வதையும்'' கடவுளிடம் பொருத்தனையாக செய்து கொண்டார். அதிலே நிலைத்திருந்தார்.

அப்பொழுது எருசலேமிலே தேவனுடைய ஆலய வேலைக்காக இஸ்ரவேலர்களெல்லாரும் போனார்கள். எஸ்றாவும் தன்னுடைய ராஜாவை வேண்டிக்கொண்டார். ராஜா அவனுக்கு தயை செய்து அவனைப் போகவிட்டார், ஏன் தெரியுமா? அவன் தேவனுடைய வசனத்தைப் படிப்பதோடு மட்டுமல்லாமல், அதன்படி வாழ்ந்ததினால்தான், தேவனுடைய கரம் எஸ்றாவிடம் இருந்தது. மேலும் ராஜா தங்கம், வெள்ளி, தட்டுமுட்டுகள், உப்பு மற்றும் தேவையான பொருட்களையும் கொடுத்து அனுப்பினார். தேவனுடைய தயவுமுள்ள கரமும் கடைசிவரை இவரோடு இருந்து இவரை எருசலேமுக்கு பத்திரமாக வழிநடத்தி சென்றது.

பார்த்தீர்களா! எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்? நீங்களும் இந்தவருடம் எஸ்றாவைப் போல வேதத்தை வாசித்து, தியானம் செய்வீர்களானால் கர்த்தர் உங்களுடனே கூட இருப்பார். எவ்வளவு பெரிய பிரச்சனை வந்தாலும் கர்த்தருடைய தயவு நிச்சயமாக உங்களுக்கும் கிடைக்கும்.

இதுவரை நீங்கள் வேதத்தை தினசரி தொடர்ந்து படிக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, இன்றிலிருந்து எஸ்றாவைப் போல வேதத்தை படிப்பீர்களா? படித்தால், தேவன் உங்களோடே இருப்பார் மற்றும் ஆசீர்வதிப்பார்.

**மனனவசனம் : சங்கீதம் 1:2** "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்."

– ஏஞ்சலின் கமலம்

# பவுல்


கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! உங்களை ஆண்டவர் இயேசுவின் நாமத்தினால் வாழ்த்துகிறேன்.

புது வருஷம், எல்லாம் புதிதாக இருக்கும்; மகிழ்ச்சியும் புதிதாக இருக்கும், இந்த மகிழ்ச்சியோடு பைபிள் சம்பவங்களை தெரிந்துக்கொள்ளலாமா?

சிலிசியா நாட்டிலே உள்ள தர்சு பட்டணத்தில் சவுல் என்ற பவுல் என்பவர் இருந்தார். தேவன் அவரை ஊழியத்திற்கு அழைத்த போது, அவர் உலக சிந்தனை எதுவும் செய்யாமல், தேவனுடைய வேலையை செய்ய தன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்தார். பாருங்கள், இவர் இயேசுவைப் பற்றி சொல்லாத இடமே இல்லை. ஊருஊராக, தெரு தெருவாக, வீடுவீடாக சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்.

அப்போஸ்தலர் 16ம் அதிகாரத்தில் சுவிசேஷத்தைச் சொல்லும் போது, அவரைப் பிடித்து அவர் வஸ்திரங்களைக் கிழித்து, அநேக அடி அடித்துக் காவலில் வைத்தார்கள். அங்கும் கூட தேவனைத் துதித்துப் பாடி மகிமைப்படுத்தி, சிறைச்சாலைகாரருக்கும் இயேசுவை பற்றிச் சொன்னார். சிறைச்சாலை அதிகாரியின் வீட்டிலுள்ள எல்லாரும் இரட்சிக்கபடும்படியாக சுவிசேஷம் சொல்லி அவர்களையும் தேவனுக்கு என்று ஆதாயப்படுத்தனார்.

எல்லா மனிதரும் இரட்சிக்கபட வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. இந்தத் தேவனுடைய சித்தத்தைப் பவுல் வாழ்நாள் முழுவதும் செய்து கொண்டுவந்தார். எவ்வளவோ கஷ்டங்கள், போராட்டங்கள் மற்றும் பிரச்சனைகள் வந்தும், பவுல் தன்னுடைய தீர்மானத்தில் உறுதியாயிருந்து, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார். பிள்ளைகளா! நீங்களும் இந்த வருஷத்தில் இயேசுவைப் பற்றி தினமும் யாருக்காவது சொல்வீர்களா? தேவசித்தத்தை செய்வீர்களா? உங்கள் நண்பர்கள், உறவினர்கள், உங்கள் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள், எதிர் வீட்டில் உள்ளவர்கள் என யாரை பார்த்தாலும் இயேசுவை பற்றி சொல்வீர்களா? ஒருநாளைக்கு குறைந்த பட்சம் 5 நிமிடமாவது செலவழித்து ஆண்டவரைப் பற்றிச் சொல்ல தீர்மானம் எடுத்து, அதை தினசரி செய்யுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்!



**மனனவசனம் : யாத்திராகமம் 20: 24**

"நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்."

– உங்கள் அண்ணன்,

ஏசுதாஸ்

# தானியேல்

ஹாய் குட்டீஸ், உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்.

பாபிலோன் பேரரசின் மாபெரும் சக்ரவர்த்தி நேபுகாச் நேச்சாரின் மந்திரி ( அமைச்சர் ) சபையில், முக்கிய மந்திரியாக, அதாவது மந்திரிகளுக்கெல்லாம் மேற்பட்ட மந்திரியாக இருந்தவர் தான் இந்த தானியேல். இந்த தானியேல் பாபிலோனிற்கு அடிமையாக கொண்டுபோகப்பட்டு, தேவனுடைய கிருபையால் உயர்த்தப்பட்டவர். தானியேல் தேவன் மீது ஆழ்ந்த பக்தியுள்ளவராய், தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்ந்தார்.



தானியேல் மீது பொறாமை கொண்ட மந்திரிகள் அனைவரும் கூடி, தானியேலுக்கு விரோதமாக ஆலோசனை செய்து, அவரை எப்படியாவது அழித்துவிட முடிவெடுத்தனர். தானியேல் தேவனுக்கு பயந்து மிகவும் நேர்மையான வாழ்க்கை வாழ்ந்ததினால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

தானியேல், தேவன் மீது வைராக்கியம் உள்ளவராக இருந்ததினால், அவர்கள் அரசரிடம் சென்று: 'அரசே, நீங்கள் தான் எங்களை ஆளுபவராக இருப்பதினால், 30 நாட்களுக்கு மக்கள் அனைவரும் உங்களை மட்டும் வணங்கவேண்டும் என்றும், அப்படி வணங்காதவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்' என்றும் வஞ்சகமாக பேசி, அரசனை சம்மதிக்க வைத்தனர். தானியேலோ எப்பொழுதும் போல தேவனை நோக்கி ஜெபம் செய்தார்.

என்ன ஆனது தெரியுமா? தானியேலை சிங்கக்கெபியிலே தூக்கிப்போட்டனர். தேவன் என்ன செய்தார் தெரியுமா? தூதர்களை அனுப்பி தானியேலை காக்க செய்தார். குட்டீஸ், நாமளும் இந்த ஆண்டு முழுவதும் தானியேலை போல எந்த சூழ்நிலையிலும் ஜெபம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து, தேவனிடம் ஜெபிக்கிறவர்களாக இருப்போமா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்!

**மனப்பாட வசனம்: யோவான் 16:24**

"இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்."

— குமினி பிரதீப்

## பொதுவான செய்திகள்

# லூயிஸ் பிரய்லி

பார்வையற்றோர் படிக்க உதவும் பிரெய்லி எழுத்து முறையைக் கண்டறிந்த லூயிஸ் பிரெய்லி (Louis Braille) பிறந்த தினமான ஜனவரி 4-ம் தேதியன்று அவர் நினைவாக சர்வதேச பிரெய்லி தினம் அனுசரிக்கப்படுகிறது. <u>பார்வையற்றோரின் விரல்களைக் கண்களாக மாற்றியமைத்த இந்த எழுத்து முறை, லட்சக்கணக்கானோருக்கு இன்று ஞானப்பார்வை அளித்துக் கொண்டிருக்கிறது.</u> பிரெய்லியின் வாழ்க்கை வரலாறு அவரைப் போன்று கண் பார்வை இழந்தோருக்கு தன்னம்பிக்கையூட்டுவதாக உள்ளது.

லூயிஸ் பிரெய்லி, பிரான்ஸின் பாரீஸ் நகருக்கு அருகே உள்ள ஒரு கிராமத்தில் 1809 ஜனவரி 4-ம் நாள் பிறந்தார். இவரது தந்தை குதிரை லாடம், சேணம் தயாரிக்கும் பட்டறை வைத்திருந்தார். 3-வது குழந்தையான லூயிஸ், ஒரு நாள் தந்தையின் பணிமனையில் ஊசியை வைத்து விளையாடியபோது, அது கண்ணில் குத்தி காயம் ஏற்பட்டது. காயத்திற்கு முறையான சிகிச்சை பெறாததால், அந்தக் கண்ணில் பார்வை பறிபோனது. பின்னர் அவருக்கு ஏற்பட்ட கண் நோயால் அவருடைய இன்னொரு கண்ணிலும் பார்வையை இழந்தார். 8 வயது முழுமை அடைவதற்குள் இரண்டு கண்களிலும் முழுவதும் பார்வை பறிபோனது.



பார்வை பறிபோனாலும், உலகத்தோடு போராடி ஜெயிக்க வேண்டும் என்ற தீவிர எண்ணம் அவர் மனதில் இருந்தது. பிரான்சில் பிரபல பாதிரியாரான வேலண்டெய்ன் இவருக்கு பல உதவிகள்

புரிந்தார். அவருடைய உதவியால் தனது 10-வது வயதில் Royal Institute for Blind Youth என்கிற பார்வையற்றோருக்கான கல்வி நிறுவனத்தில் லூயிஸ் சேர்ந்தார். அவருக்கு கண் பார்வை பறிபோன பிறகு, தன்னைச் சுற்றி இருக்கும் அனைத்தையும் கேட்டு, தொட்டு, முகர்ந்து பார்த்து உணர்ந்து அவை பற்றி அறிந்து கொண்டார்.

மொழிகள், இலக்கணம், இசை, கணிதம், கைத்தொழில் பயிற்சி அனைத்தும் இந்த முறையிலேயே கற்பிக்கப்பட்டன. படிப்பது, இசை கற்பது, கணக்குப் போட்டு பார்ப்பது, கைத்தொழில் கற்பது என புதிய அனுபவங்களில் உற்சாகமாக மூழ்கினார். இவருடைய படிப்புக்காக தன் வாழ்நாள் முழுவதும் ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருந்தார் அவரது தந்தை. பள்ளி நூலகத்தில் இருந்த நூல்கள் அனைத்தையும் ஒரே மூச்சில் படித்துவிடவேண்டும் என்கிற தணியாத ஆசை லூயிஸிக்கு இருந்தது. ஆனால், புத்தகவடிவில்தான் அவருக்கு பிரச்சனை காத்திருந்தது. ஒரு பக்கத்திற்கு ஒரு வார்த்தை அல்லது இரு வார்த்தைகள்தான் இருக்கும். 10,20 பக்கங்கள் சேர்ந்தாலே புத்தகம் ஒரு பெரிய பெட்டி அளவிற்குத் தடிமனாக இருக்கும்.

அதாவது புத்தகத்தின் மீது அனைத்து எழுத்துக்களும் தடவிப் பார்த்து உணரும் விதத்தில் மேடாக உருவாக்கப்பட்டிருக்கும். எப்படி எல்லா நூல்களையும் படித்து முடிப்பது என்று அவருக்கு அப்போது புரியவில்லை. போர்களத்தில் ராணுவத்தினர் இரவு நேரத்தில் ரகசியத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக நைட் ரைட்டிங் என்ற முறையை சார்லஸ் பார்பியர் என்ற ராணுவத் தளபதி உருவாக்கி இருந்தார். ஒரு நாள் இதுபற்றி விளக்க லூயிஸின் பள்ளிக்கு அந்த ராணுவ தளபதி வந்தார்.

அவர் உருவாக்கி இருந்த எழுத்துமுறை 12 புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. மாணவர்களுக்கு கல்வி கற்றுத்தர இந்த முறை பின்பற்றப்பட்டது. ஏற்கெனவே இருந்த அளவுக்கு சிரமம் இல்லை என்றாலும், இதிலும் சற்று சிரமப்பட்டும், மெதுவாகவும்தான் படிக்க முடிந்தது. எனவே, இதற்கு மாற்றாக எளிதாகவும், வேகமாகவும் பயில ஒரு புதிய எழுத்து முறையை உருவாக்க உறுதியேற்றார் லூயிஸ்.

இரவும் பகலும் பாடுபட்டு ஆராய்ச்சியில் இறங்கினார். புள்ளிகளைப் பல விதமாக மாற்றி மாற்றி அமைத்து, பரிசோதனைகள் செய்து, ஒரு புதிய குறியீட்டு மொழியை அவர் உருவாக்கினார். வெறும் ஆறே புள்ளிகளை மட்டும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அந்த மொழியில் பாடங்கள், சூத்திரம், அறிவியல் கோட்பாடு, கணக்கு, இசைக்குறிப்பு, கதை, கட்டுரை, நாவல் என எல்லாவற்றையும் எழுதலாம், படிக்கலாம் என்பதை அவர் நிரூபித்தார்.

இந்தப் புதிய எழுத்து முறையை உருவாக்கியபோது அவருக்கு 20 வயது கூட பூர்த்தியாகவில்லை. அவரது இந்தக் கண்டுபிடிப்பை பாராட்டி, ஊக்கப்படுத்திய பள்ளியின் இயக்குநர், பள்ளியிலும் அதை அறிமுகம் செய்தார். பட்டப்படிப்பு முடித்த பிறகு அதே பள்ளியில் லூயிஸ் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

6 புள்ளிகள் கொண்ட பிரெய்லி முறையின் முதல் புத்தகத்தை 1829-ல் அவர் வெளியிட்டார். இதே முறையைப் பயன்படுத்தி History of France என்ற நூலை அவரது பள்ளி நிர்வாகம் 1837-ல் வெளியிட்டது. தொடர்ந்து அறிவியல், கணிதம் தொடர்பான பிரெய்லி எழுத்து முறை புத்தகங்களை அவர் வெளியிட்டார். தன் நண்பர் பியரியுடன் இணைந்து, பிரெய்லி முறை தட்டச்சு இயந்திரத்தையும் லூயிஸ் தயாரித்தார்.

லூயிஸ் கண்டுபிடித்த புதிய எழுத்து முறையை ஆரம்பத்தில் கல்வியாளர்களும், அரசும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் சற்றும் மனம் தளராமல், தன்னைப்போன்ற பார்வையற்றவர்கள் மத்தியில் இந்த எழுத்தைப் பற்றித் தொடர்ந்து பிரச்சாரம் செய்துகொண்டே இருந்தார்.

தனது முயற்சிகளுக்கு சமுதாய மற்றும் சட்டப்பூர்வமான அங்கீகாரம் பெற தொடர்ந்து போராடியும் அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை. பார்வையற்றோர் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றிவைத்த மேதை லூயிஸ் பிரெய்லி, காசநோயால் பாதிக்கப்பட்டு 1852 ஜனவரி 6-ம் நாள் தனது 43-வது வயதில் உயிர் நீத்தார்.

- (Selected)

## ஜனவரி மாதக் கேள்விகள்

1. பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன் என்றவர் யார்?

2. சீர்கெட்ட பிள்ளைகளுடைய சீர்கேடுகளை குணமாக்குபவர் யார்?

3. கிறிஸ்து தங்களை ஆரோக்கியமாக்காமலிருக்க யூத ஜனங்கள் செய்த தவறு என்ன?

4. சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை வழிநடத்த ஆவியானவர் சுயமாய் பேசாமல், யார் சொன்னதை அறிவிப்பார்?

5. இன்று அவருடைய சத்தத்தை கேட்பீர்களாகில் என்ன செய்யக்கூடாது என எபிரேய ஆசிரியர் கூறுகிறார்?

6. யாக்கோபு, நம்மையே நாம் வஞ்சியாதபடி என்ன செய்ய சொல்கிறார்?

7. யோபு, ஆகாரத்தைப் பார்க்கிலும் எதை காத்துக்கொண்டதாக சொல்கிறார்?

8. "நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, தனக்கென்று மரிக்கிறதுமில்லை" என வாசிப்பதெங்கே?

9. தேவன் தாழ்மையுள்ளவர்களுக்கு அளிப்பது என்ன?

10. மன்னித்து, குணமாக்கி, மீட்டு, முடிசூட்டி, திருப்தியாக்குகிறவரை என்ன செய்ய வேண்டும்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-02-2019**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**

**45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,**
**அரசரடி, மதுரை - 625 016**
**செல்: 92 4421 4421, 92 4431 4431**

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. கொலோ 3:15 | 6. ரோமர் 14:7-8 |
| 2. லூக்கா 19:8 | 7. சங் 34:1 |
| 3. எபே 4:32 | 8. லூக்கா 1:45 |
| 4. சங் 116:12 | 9. யோவான் 12:3 |
| 5. தானி 6:16 | 10. லூக்கா 8:39 |

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
2. Mrs. மேரிராஜ் – மதுரை
3. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
4. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
5. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
6. S. டேவிட் சாந்குமார் – நெல்லை
7. Dr. D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
8. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
9. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
10. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
11. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
12. Mrs. ஞான சிரோன்மணி – சமயநல்லூர்
13. M.S. ஜேம்ஸ் – திண்டுக்கல்
14. S. கேத்ரின் அருள்நேசம் – மதுரை
15. R. சரோஜா – தென்கலம்
16. M. ஈஸ்வரி – கரூர்
17. G. ஏஞ்சலம்மாள் – ஒத்தக்கடை
18. J. விஜய் – ஒத்தக்கடை
19. Mrs. பங்கஜம் ஜேம்ஸ் – ஒத்தக்கடை
20. லீலா ஜோசப் – கோவை
21. Mrs. மேரி சாராள் – சமயநல்லூர்
22. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
23. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
24. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
25. Mrs. ஹெலன் திலக் – மதுரை
26. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
27. Mrs. பியூலா ஜேசுராஜன் – புதுச்சேரி
28. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
29. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
30. Mrs. ஜெயமணி ராஜம்மாள் – கூடலூர்
31. Mrs. V.V. அஜிதா – கன்னியாகுமரி
32. Mrs. சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
33. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
34. V.G. சாமுவேல் – தூத்துக்குடி
35. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
36. Mrs. கிறிஸ்டி ஜோசப் – திருநெல்வேலி
37. Mrs. ராணி சாந்தகுமார் – மதுரை
38. ரோஸ்மேரி – சென்னை
39. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – நெல்லை
40. Mrs. D. குளோரி திலகவதி – ஈரோடு
41. Mrs. T. தேவராணி தாமஸ் – பெங்களூர்

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!**

# சென்றமாதம் நடைபெற்ற ஊழியங்களில் சில





ஏழை எளிய மற்றும் திக்கற்ற பார்வையற்றோர்களுக்கும் விதவைகளுக்கும் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தும்படியாக அரிசி, பரிசு பொருள் மற்றும் உணவு சுமார் 100க்கும் அதிகமானோருக்கு வழங்கப்பட்டது.





இந்த புதிய ஆண்டின் முதல் தினத்தன்று கிறிஸ்துவுக்குள் வசனத்திற்கு கீழ்படிந்த பார்வையற்ற தம்பதியர் மற்றும் வாலிபர்கள்





கஜா புயலினால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்ட பார்வையற்ற சகோதரனின் குடும்பம் மற்றும் தரங்கம்பாடி கிறிஸ்துவின் சபை விசுவாசிகளுக்கு நிவாரண உதவி வழங்கப்பட்டது









டிசம்பர் 25ஆம் தேதி விசுவாசிகளுக்கான பக்தி விருத்தி கூட்டம் மற்றும் ஐக்கிய விருந்து நடைபெற்றது.

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2018 - 2020
Date of Publication : 8th January 2019
Posted at Arasaradi HPO on 10th, 11th January 2019

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்






அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!





## தபால் வழி பைபிள் பாடங்கள்





அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced)
பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து,
அழகிய சான்றிதழும் (Certificate)
முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்

உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு
92 4421 4421, 92 4431 4431

If undelivered please return to :
EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To